20.05.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### ரோனு புயல் காரணமாக ஒடிசாவில் இன்று இடியுடன்கூடிய கன மழை பெய்யும்

ரோனு புயல் காரணமாக ஒடிசாவில் இன்று இடியுடன்கூடிய கன மழை பெய்யும் பலத்த காற்று வீசும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அங்கு மீனவர்கள் யாரும் கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பாக சென்னை அருகே தென்மேற்கு வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவானது.

அது வடக்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று சென்னை, காஞ்சீபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் பலத்த மழை பெய்தது. தொடர்ந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக அது மாறி, மத்திய மேற்கு வங்க கடலில் ஆந்திர மாநிலம், நெல்லூருக்கு தென்கிழக்கில் நிலைகொண்டது.

நேற்று அது புயல் சின்னமாக மாறி, மசூலிப்பட்டினத்துக்கு 125 கி.மீ. தென் கிழக்கிலும், விசாகப்பட்டினத்துக்கு 350 கி.மீ. தென்மேற்கிலும், காக்கிநாடாவுக்கு 225 கி.மீ., தென்மேற்கிலும் மையம் கொண்டது. அது மேலும் நகர்ந்து ஒடிசாவை நெருங்குகிறது. இந்த புயலுக்கு ரோனு என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

### ஆந்திரம், தெலங்கானா, ஒடிஸாவில் பலத்த மழை பெய்ய வாய்ப்பு

வங்கக் கடலில் மையம் கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக, ஆந்திரம், தெலங்கானா, ஒடிஸா ஆகிய மாநிலங்களில்

பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் (ஐ.எம்.டி.) தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, ஐ.எம்.டி.யின் புயல் எச்சரிக்கை மையம் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தென்மேற்கு வங்கக் கடலில் மையம் கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், வடக்கு, வடகிழக்காக நகர்ந்து தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறியுள்ளது.

இது, வங்கதேசத்தின் தெற்குப் பகுதியில் உள்ள கேபுபாராவுக்கும், காக்ஸ் பஜாருக்கும் இடையே வெள்ளிகிழமை நள்ளிரவுக்குப் பின் கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக, ஆந்திரம், தெலங்கானா, ஒடிஸா ஆகிய மாநிலங்களில் பெரும்பாலான பகுதிகளில் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மேலும், ஆந்திரப் பிரதேசம், ஒடிஸாவின் தெற்குப் பகுதி, வடதமிழகம் ஆகிய பகுதிகளில் கடல் சீற்றத்துடன் காணப்படும். ஆந்திரப் பிரதேச கடற்கரையில் கடல் அலை ஒரு மீட்டர் உயரத்துக்கு எழுச்சி பெற்று சீற்றத்துடன் காணப்படும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## மே 23இல் மஞ்சள் சாகுபடியில் தொழில்நுட்ப இலவச பயிற்சி

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும் 23ஆம் தேதி மஞ்சள் சாகுபடியில் தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடைபெற உள்ளது என வேளாண் அறிவியல் நிலைய ஒருங்கிணைப்பாளர் என்.அகிலா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: மஞ்சள் சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சியில் மஞ்சளில் புதிய மேம்படுத்தப்பட்ட ரகங்கள், அதன் சிறப்பியல்பு, விதை நேர்த்தி, நடவு முறை, உர மேலாண்மை, நீர்ப்பாசனம், கள நிர்வாகம் போன்ற பல்வேறு தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

பயிற்சியில் விவசாயிகள், கிராமப்புறப் பெண்கள், இளைஞர்கள் உள்பட ஆர்வமுள்ளோர் கலந்து கொள்ளலாம். பயிற்சியில் கலந்துகொள்ள விரும்பமுள்ளோர் வரும் 21ஆம் தேதிக்குள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்தோ அல்லது 04286-266345, 266650 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டோ பெயர் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### சந்தையில் கன்றுகள் விற்பனை அமோகம்

புன்செய்புளியம்பட்டி: புன்செய்புளியம்பட்டி மாட்டுச்சந்தை ஒவ்வொரு வாரமும் புதன், வியாழன் இரு நாட்கள் நடைபெறும். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டது முதல், நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்ததால், பணத்தை எடுத்து செல்ல முடியாமல் வியாபாரிகள் பாதிக்கப்பட்டனர். இதனால் மாடுகளின் விலையும் குறைந்தது. தேர்தல் முடிந்து, நேற்று முடிவுகளும் அறிவிக்கப்பட்டது. இதனால் வியாபாரிகளின் வருகை அதிகரித்ததால், வியாபாரம் அமோகமாக இருந்தது. குறிப்பாக வளர்ப்புக்கன்றுகளை விவசாயிகள் அதிக அளவில் வாங்கி சென்றனர்.

### தொடர் மழையினால் வார சந்தை மந்தம்

அவலுார்பேட்டை:அவலுார்பேட்டையில், மழையின் காரணமாக வாரசந்தை மந்தமாக இருந்தது.

மேல்மலையனுார் தாலுகா அவலுார்பேட்டையில் புதன் கிழமை தோறும் சந்தை நடக்கிறது. இந்நிலையில், தமிழகத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலத்தினால் மழையும், குளிர் காற்றும் வீசுகிறது

மழையின் காரணமாக அவலுார்பேட்டையில் நேற்று நடந்த சந்தையில் விவசாயிகள் ஆடு, மாடு, கோழிகளை விற்பனைக்கு கொண்டு வரவில்லை.

இதே போல் காய்கறி கடைகளும் குறைந்ததால், வழக்கமாக பரபரப்பாக காணப்படும் சந்தை நேற்று மந்தமாக இருந்தது.

## இரவு முழுவதும் பெய்த தொடர் மழையால் சோளத்தட்டுகள் சாய்ந்தன

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டை பகுதியில், நேற்று முன்தினம் இரவு பெய்த தொடர் மழையால் சோளத்தட்டுகள் சாய்ந்தன.

நாமகிரிப்பேட்டை சுற்றுவட்டார பகுதியில் கடந்த, இரண்டு நாட்களாக இரவு நேரத்தில் தொடர்ந்து மழை பெய்கிறது. நாமகிரிப்பேட்டை, தண்ணீர்பந்தல்காடு, அரியாகவுண்டம்பட்டி, வெள்ளக்கல்பட்டி, ஆர். புதுப்பட்டி, மூலைப்பள்ளிப்பட்டி, மெட்டாலா உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்ததால், வயல்வெளிகளில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. அதே சமயம், சோளத்தட்டு பயிர்கள் வயல்களில் சாய்ந்து விட்டன. மேலும், 4 அடி வளர்ந்த சோளத்தட்டு சாய்ந்ததால், உடனடியாக அறுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: தற்போது பெய்த மழை கோடை உழவுக்கு போதுமானதாக இருக்கும். ஏற்கனவே மானாவாரியாக நடப்பட்டிருந்த மரவள்ளி கிழங்குக்கு இந்த மழை மிகவும் தேவையாக இருந்தது. இனிமேல் கடலை, சோளம் விதைக்கும் பணி தீவிரமாக நடக்கும். இவ்வாறு கூறினர்.

## தமிழகம், கேரளாவில் முட்டை விலை 420 காசாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 420 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நேற்று நடந்தது. அதில், முட்டை உற்பத்தி, மார்க்கெட்டிங் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 435 காசுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை விலை, 15 காசுகள் குறைந்து, 420 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. உற்பத்தி குறைவால், முட்டை விலை குறைந்துள்ளது.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) நிலவரம்: சென்னை, 470, ஐதராபாத், 430, விஜயவாடா, 420, பர்வாலா, 350, மும்பை, 455, மைசூர், 462, பெங்களூரு, 455, கோல்கட்டா, 445, டில்லி, 360 என, நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், ஒரு கிலோ, 74 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த முட்டைக்கோழி விலை, இரண்டு ரூபாய் உயர்த்தி கிலோ, 76 விலை நிர்ணயம் செய்யப்பட்டது. பல்லடத்தில் நடந்த உற்பத்தியாளர் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில், ஒரு கிலோ, 84 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த கறிக்கோழி விலையை, மூன்று ரூபாய் குறைத்து கிலோ, 81 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கருப்பு தேயிலை உற்பத்தியில் இந்தியா இந்தாண்டும் சாதனை படைக்கும்

குன்னூர், : உலக அளவில் கருப்பு தேயிலை உற்பத்தியில் இந்தியா இந்தாண்டு முதல் 3 மாதங்களில் 2ம் இடம் பிடித்துள்ளது. இந்தாண்டு ஜனவரி முதல் மார்ச் இறுதி வரை 30.14 கோடி கிலோவாக இந்திய தேயிலை உற்பத்தி இருந்தது. கடந்தாண்டு 31.46 கோடி கிலோவாக

இருந்தது. இதன்படி 1.42 கோடி கிலோ உற்பத்தி குறைந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் கென்யா, இலங்கை, உகாண்டா ஆகிய நாடுகளில் உற்பத்தி மிகவும் குறைந்துள்ளது.

ஆனால் தென் இந்தியாவில் மட்டும் கருப்பு தேயிலை உற்பத்தி 57 லட்சம் கிலோ கூடுதலாக கிடைத்துள்ளது. இதன்படி உலக அளவில் இந்தாண்டு இலங்கை 7.39கோடி கிலோ, கென்யா 11.28 கோடி கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் உகாண்டாவில் கடந்தாண்டு 1.49 கோடி உற்பத்தி செய்யப்பட்டிருந்த நிலையில் இந்தாண்டு குறைந்தபட்சமாக 40 லட்சம் கிலோ மட்டுமே தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இதனால் இந்தாண்டு தேயிலை உற்பத்தியில் இலங்கை முதலிடத்திலும், இந்தியா 2ம் இடத்திலும் இருந்து வந்தது. ஆனால் தற்போது இந்தியாவில் கருப்பு தேயிலை உற்பத்தி அதிகரிக்க துவங்கி உள்ளதால் அடுத்த காலாண்டில் முதலிடத்தை பிடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுகுறித்து சர்வதேச நிர்வாகவியல் ஆலோசகர் சுந்தர் கூறுகையில்: கடந்தாண்டு ஜனவரி முதல் டிசம்பர் இறுதி வரை கருப்பு தேயிலை உற்பத்தியில் 100 கோடிகிலோ உற்பத்தி செய்து இந்தியா சாதனை படைத்தது. அதேபோல் இந்தாண்டும் 2வது காலாண்டில் தேயிலை தூள் உற்பத்தி அதிகரிக்க கூடும். இந்நிலை நீடிக்கும் பட்சத்தில் இந்தாண்டும் இந்தியா கருப்பு தேயிலை உற்பத்தியில் சாதனை படைக்கும் என எதிர்பார்ப்பதாக கூறினார்.

அதே போல் உணவு கட்டணங்களும் பல மடங்கு உயர்த்தப்படுகிறது. தற்போதும் கூட சில ஓட்டல்கள், காட்டேஜ்கள் மற்றும் லாட்ஜ்கள் இது போன்ற வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக மே மாதம் முதல் இரண்டாம் வரையும், ரோஜா மற்றும் மலர் கண்காட்சியை காண வரும் சமயங்களில் அறை மற்றும் உணவு கட்டணம் என்ற பெயரில் சிலர் கொள்ளையடித்து விடுகின்றனர். இந்த கட்டண கொள்ளையில் இருந்து தப்பித்துக் கொள்ள தற்போது பெரும்பாலான சுற்றுலா பயணிகள் தங்களது வாகனங்களில் வந்து ஒரே நாளில் சுற்றி பார்த்துவிட்டு சொந்த ஊர்களுக்கு இரவோடு இரவாக திரும்பிகின்றனர்.

சிலர் அருகில் உள்ள மாவட்டங்களுக்கு சென்று தங்கி கொள்கின்றனர். மேலும், மாத துவக்கத்தில் வருவதை தவிர்த்துவிட்டு பெரும்பாலானவர்கள் மே மாதம் 15ம் தேதிக்குள் மேல் வருவதை கடந்த சில ஆண்டுகளாக பின்பற்றக் துவங்கிவிட்டனர். இம்முறையும் துவக்கத்தை காட்டிலும் தற்போது ஊட்டி வரும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மேலும், இம்முறை சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு ரோஜா, காய்கறி கண்காட்சி போன்றவைகள் ரத்து செய்யப்பட்ட நிலையில், வரும் 21,22 ஆகிய இரு நாட்கள் குன்னூரில் பழக்காட்சியும், அடுத்த வாரம் 27ம் தேதி துவங்கி 29ம் தேதி வரை ஊட்டியில் மலர் கண்காட்சியும் நடக்கிறது. எனவே, தற்போது ஊட்டி வரும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வாகன நெரிசலை தவிர்ப்பதற்காகவும், கட்டண கொள்ளையில் இருந்து தப்பித்துக் கொள்ள இறுதி வாரத்தில் அதிகளவு சுற்றுலா பயணிகள் வருகின்றனர்.

**உடலுக்கு குளிர்ச்சி தரும் மண் பாத்திரம்**




கோடைகாலத்தில் நாம் எதிர்கொள்ளும் உடல் உஷ்ணம், கண் எரிச்சல் பிரச்னைகளை தீர்க்கும் மண் பாண்டங்கள் பல்வேறு நன்மைகளை தரக்கூடியது. நீரை சேமிக்க, சமையல் செய்வதற்கு மண் பாத்திரங்கள் பயன்படுகிறது. இன்றைய அவசர உலகத்தில் பலவகை உணவுகளை

எடுத்துக்கொள்வதால் அமிலத்தன்மை ஏற்படுகிறது. மண்பானை சமையல் அமிலத்தன்மையை போக்குகிறது.

மண் பாத்திரங்கள் வாங்கினால், அதை 7 நாட்கள் நீரில் ஊறவைத்த பின் பயன்படுத்த வேண்டும். இதனால் மண்துகள்கள் இல்லாமல் போகும். உணவில் மண் கலக்காமல் இருக்கும்.கோடைகாலத்தில் அதிக உஷ்ணத்தால் கண் எரிச்சல், கண் சிவந்து போகுதல் போன்றவை ஏற்படும். மண் பாத்திரத்தை பயன்படுத்தி இப்பிரச்னைகளை போக்கும் முறைகளை காண்போம்.

மண் பாத்திரத்தில் தண்ணீர் எடுத்துக் கொள்ளவும். வில்வ இலைகளை சுத்தப்படுத்தி மண்பாத்திரத்தில் சுமார் 4 மணி நேரம் வரை ஊறவைக்கவும். பின்னர், வில்வ இலைகளை எடுத்துவிட்டு தண்ணீரில் கண்களை கழுவினால் கண் எரிச்சல் சரியாகும். கண்கள் சுத்தமாகும். கண்களில் ஏற்படும் சிவப்பு தன்மை மாறும்.கோடைகாலத்தில் கண் எரிச்சல் என்பது தவிர்க்க முடியாதது. காற்றினால் பரவும் கிருமிகள் கண்களை பாதிக்கும். இப்பிரச்னைக்கு வில்வ இலை மருந்தாகிறது.

வெட்டிவேரை பயன்படுத்தி உடலுக்கு குளிர்ச்சி தரும் நீர் செய்முறை குறித்து பார்க்கலாம். வெட்டி வேரை நன்றாக சுத்தப்படுத்தி எடுக்கவும். வெட்டிவேரை மண்பானை தண்ணீரில் போட்டு ஊறவைக்கவும். இந்த தண்ணீரை குடித்துவர வயிற்றுவலி சரியாகும். சிறுநீர் தாரையில் ஏற்படும் எரிச்சல், சிறுநீரோடு ரத்தம் கலந்து வருவது குணமாகும். சிறுநீர் பாதைக்கு குளிர்ச்சி தரும். உடல் உஷ்ணம் குறையும்.

தாமரை இதழை பயன்படுத்தி உடல் சோர்வை போக்கும் முறை குறித்து பார்க்கலாம். மண்பானையில் தண்ணீர் எடுத்துக் கொள்ளவும். இதில் தாமரை இதழ்களை போட்டு இரவு முழுவதும் வைத்து தண்ணீரை குடித்துவர உடல் சோர்வு நீங்கும். அற்புதமான மருந்தாக விளங்கும் தாமரை இதழ் இதயத்தை பலப்படுத்தும். உடல் உஷ்ணத்தை குறைக்கும். உடலுக்கு குளிர்ச்சி தரும் நீர் ஆகாரம் செய்யும்முறை குறித்து பார்க்கலாம்.

ஊறவைத்த பழைய சாதத்தை மண்பாத்திரத்தில் எடுக்கவும். இதனுடன் பசுவின் தயிர் சேர்க்கவும். தேவையான அளவு உப்பு, நறுக்கிய பச்சை வெங்காயம், சிறிது பச்சை மிளகாய் சேர்த்து நீர்விட்டு நன்றாக கரைக்கவும். கோடைகாலத்தில் இதை சாப்பிட்டுவர நீர் இழப்பு சமன்படுகிறது. புத்துணர்வு ஏற்படுகிறது. உடலுக்கு குளிர்ச்சியை தருகிறது. அல்சர் இருப்பவர்கள் மண் பாத்திரத்தில் சமைத்து சாப்பிடுவது நல்லது.

**பித்தத்தை சமன்படுத்தும் நெல்லிக்காய்**




கோடை காலத்தில் உடலின் வெப்பம் அதிகரிக்கிறது. நீர் சத்து குறைகிறது. பித்தம் அதிகரிக்கிறது. இதனால் உடலில் வறட்சி ஏற்படுகிறது. உள் உறுப்புகளில் வறட்சி ஏற்படுகிறது. இதனால் மூளை செயல் இழந்து மயக்கம் ஏற்படுகிற நிலை உருவாகிறது. இது போன்ற பிரச்னைகளை தீர்ப்பதற்கு எலுமிச்சை, நெல்லி போன்றவை மிகச் சிறந்த தீர்வுகளை அளிக்கின்றன.

எலுமிச்சை தோல்களை சிறிய துண்டுகளாக நறுக்கி எடுத்துக் கொள்ள வேண்டும். அதனுடன் சம அளவு பனங்கற்கண்டு சேர்க்க வேண்டும். அதனுடன் சிறிதளவு ஜாதிக்காய் பொடியை சேர்க்க வேண்டும். இதை சுமார் ஏழு நாட்களுக்கு வெயிலில் வைக்க வேண்டும். பாத்திரத்தின்

வாயை வெள்ளை துணியால் கட்டி வைக்க வேண்டும். அவ்வப்போது கைபடாமல் இந்த கலவையை கிளறிவிட வேண்டும்.

இதன் மூலம் பனங்கற்கண்டு நன்றாக கரைந்து எலுமிச்சை தோலுடன் கலந்திருக்கும். இதை தினமும் காலையில் வெறும் வயிற்றில் அரை ஸ்பூன் சாப்பிட்டு வர வேண்டும். இதன் மூலம் வெயில் காலத்தில் ஏற்படும் பித்தம் குறையும். வயிறு தொடர்பான பிரச்னைகளும் ஏற்படாமல் இருக்கும். அடுக்கபடியாக எலுமிச்சை தோலை பயன்படுத்தி வெயில் காலத்தில் தோலில் ஏற்படும் கருமை நிறத்தை போக்குவது தொடர்பான மருந்தை தயார் செய்யலாம்.

எலுமிச்சை பழத்தை நன்றாக பிழிந்து எடுத்து விட்டு அதன் தோலை எடுத்துக் கொள்ள வேண்டும். பின்னர் தோலை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி வெயிலில் நன்றாக காய வைக்க வேண்டும். நன்றாக காய்ந்ததும் அதை பொடி செய்து எடுத்துக் கொள்ள வேண்டும். தேவையான அளவு எலுமிச்சை தோல் பொடியை எடுத்துக் கொண்டு அதனுடன் தயிர் சேர்க்க வேண்டும். இந்த கலவையை தோலில் பூசியிருந்து 15 நிமிடம் வரை வைத்திருக்க வேண்டும்.

பின்னர் இதை கழுவ வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் வெயிலால் ஏற்பட்ட கருமை நிறம் மாறும். அதே போல் நெல்லிக்காயை பயன்படுத்தி கோடை காலத்தில் ஏற்படும் பித்தத்தை சமன் படுத்தும் மருந்தை தயார் செய்யலாம். இதற்கு தேவையான பொருட்கள். பொடியாக நறுக்கிய நெல்லிக்காய் துண்டுகள், ஜாதிக்காய் பொடி, தேன், சுக்கு பொடி. நறுக்கி வைத்த நெல்லிக்காய் துண்டுகளுடன் சிறிதளவு சுக்கு பொடி சேர்க்க வேண்டும்.

சிறிதளவு ஜாதிக்காய் பொடி சேர்க்க வேண்டும். தேவையான அளவு தேன் சேர்க்க வேண்டும். இதை நன்றாக கிளற வேண்டும். பாத்திரத்தை வெள்ளை துணியால் மூடி 7 நாட்களுக்கு வெயிலில் வைத்து எடுக்க வேண்டும். இதன் மூலம் தேன் நன்றாக நெல்லிக்காயுடன் கலக்கும். இதை தினமும் காலையில் அரை ஸ்பூன் சாப்பிட்டு வர வேண்டும். இதனால் கோடை காலத்தில் ஏற்படும் கல்லீரல் தொடர்பான பிரச்னைகளில் இருந்து விடுபடலாம்.

**மலச்சிக்கலை போக்கும் வாழைப்பழம்**



கோடைகாலம் என்பதால் உடலில் பல்வேறு பிரச்னைகள் ஏற்படும். வெயிலின் தாக்கத்தால் ஆசனவாய் எரிச்சல், கடுப்பு, மூலம், மலச்சிக்கல் போன்றவை ஏற்படும். வாழைப்பழத்தை பயன்படுத்தி மலச்சிக்கலை போக்கும் பானம் தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: வாழைப்பழம், பனங்கற்கண்டு, பால். ஒரு பாத்திரத்தில் சிறிது பனங்கற்கண்டு எடுத்துக் கொள்ளவும். இதை நீர் விட்டு கொதிக்க வைக்கவும். பனங்கற்கண்டு கரைந்தவுடன் வடிகட்டி எடுக்கவும்.

இதனுடன் மசித்த வாழைப்பழம் சேர்த்து கலக்கவும். இதில், பால் சேர்த்து இரவு உறங்கப்போகும் முன்பு ஒரு டம்ளர் அளவுக்கு குடித்துவர மலச்சிக்கல் சரியாகும். கோடைகாலத்தில் ஏற்படும் ஆசனவாய் வெடிப்பு, எரிச்சல் வராமல் தடுக்கலாம். சோர்வை போக்கும். வெயிலால் உடலில் நீர்வற்றி போவதால் சிறுநீர் எரிச்சல், மலச்சிக்கல் இருக்கும். இதற்கு வாழைப்பழம் மருந்தாகிறது.

கறிவேப்பிலையை பயன்படுத்தி ஆசனவாயில் ஏற்படும் எரிச்சலை தடுக்கும் மருந்து தயாரிக்கலாம். சுமார் 30 கறிவேப்பலையை நீர்விடாமல் அரைத்து எடுக்கவும். இதனுடன் சிறிது பனங்கற்கண்டு சேர்க்கவும். நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி காலையில் வெறும் வயிற்றில் குடித்துவர மலச்சிக்கல் சரியாகும். ஆசனவாயில் ஏற்படும்

எரிச்சல், வலி குணமாகும். உடலுக்கு குளிர்ச்சி தரும். இழந்துபோன நீர்ச்சத்தை ஈடுகட்டுகிறது. உணவுப் பாதையில் உள்ள புண்களை ஆற்றும். சோர்வை போக்கும் தன்மை கொண்டது.

கறிவேப்பிலை உன்னதமான மருத்துவ குணங்கள் உடையது. இதில் இரும்புச் சத்து, வைட்டமின் சி அதிகம் உள்ளது. கால்சியம் சத்து கணிசமான அளவில் இருக்கிறது. குப்பைமேனி, வேப்பிலையை பயன்படுத்தி ஆசனவாயில் எரிச்சலை போக்கும் மருந்து தயாரிக்கலாம். ஒரு பாத்திரத்தில் நெய் விடவும். நெய் உருகியதும் குப்பை மேனி இலைகள் மற்றும் வேப்பிலை பசையை சேர்த்து தைலமாக காய்ச்சவும். இதில், ஒரு தேக்கரண்டி சாப்பிட்டுவர உடல் உஷ்ணம் தணிந்து போகும். மலச்சிக்கல் மறைந்து போகும்.

இதை வடிகட்டி மேல் பற்றாக போடும்போது ஆசனவாய் வெடிப்பு, எரிச்சல், வலி சரியாகும். உடலில் உஷ்ணம் இல்லாமல் செய்வது வேப்பிலை. உடலை மேன்மை படுத்தும் தன்மை கொண்டது குப்பை மேனி. கோடைகாலத்தில் ஏற்படும் ஆசனவாய் வெடிப்பு, தொற்று ஆகியவற்றை போக்கும் மேல்பூச்சு மருந்து தயாரிக்கலாம். மாசிக்காய் பொடி, கடுக்காய் பொடி ஆகியவற்றை சம அளவு எடுத்து கலந்து கொள்ளவும். இதனுடன் விளக்கெண்ணெய் சேர்த்து நன்றாக கலந்து ஆசனவாயில் மேல்பூச்சாக போடும்போது வெடிப்பு விரைவில் குணமாகும். ஆசனவாயில் ஏற்படும் தொற்று விலகும். கால்களில் ஏற்படும் வெடிப்புக்கும் இதை பயன்படுத்தலாம்.

**நலம் வாழ நட்ஸ்!**



**உணவே மருந்து**

நட்ஸ் நல்லது என்கிறார்கள் சிலர். எல்லா வகையான நட்ஸும் நல்லவையல்ல என்கிறார்கள் வேறு சிலர். இதனால் நட்ஸ் நல்லதா, கெட்டதா என்கிற குழப்பத்தில் அதைத் தவிர்க்கிறவர்களே அதிகம். நட்ஸின் முக்கியத்துவம், எடுத்துக் கொள்ளவேண்டிய அளவு மற்றும் முறைகளைப் பற்றி விளக்குகிறார் உணவியல் நிபுணர் டாக்டர் கோமதி கௌதம்.

“நட்ஸ் வகைகளான பாதாம், பிஸ்தா, வால்நட் போன்றவற்றில் மீன்களில் இருப்பது போல் ஒமேகா-3 ஃபேட்டி ஆசிட் நிறைந்துள்ளது. ஒமேகா-3 ஃபேட்டி ஆசிட் இதயத்தை பாதுகாப்பதோடு, சருமத்தின் அழகை பராமரிக்கவும், ரத்தத்தில் உள்ள கொலஸ்ட்ராலின் அளவை கட்டுப்படுத்துவதால் நீரிழிவு, இதய நோய் போன்றவற்றை வராமல் தடுக்க முடியும். இவற்றில் வைட்டமின் ஈ அதிகம் இருப்பதால் சருமப் பொலிவை அதிகப்படுத்தி இளமையைத் தக்க வைக்கும்.

வால்நட்ஸில் மன அழுத்தத்தை விரட்டும் ஆல்பா லினோலினிக் அமிலம் உள்ளது. பணியிடக்கில் வேலைப்பளு அதிகம் உள்ளவர்களும் மன அழுத்தம் உள்ளவர்களும் வால்நட்ஸை சாப்பிட்டு வந்தால் மன அழுத்தத்திலிருந்து விடுபடலாம். நுரையீரல் புற்றுநோயைத் தடுக்கும்

காமா டோகோபெரால் என்னும் கெமிக்கல் பிஸ்தாவில் அதிக அளவில் இருப்பதால், அதை உணவில் சேர்த்து வரும்போது அந்த ஆபத்திலிருந்து விலகி இருக்கலாம்.

பாதாம், வால்நட் மற்றும் பிஸ்தா போன்றவற்றில் நல்ல கொலஸ்ட்ரால் நிறைந்திருப்பதால் ரத்தத்தில் உள்ள கெட்ட கொலஸ்ட்ராலின் அளவைக் கட்டுப்படுத்த முடியும். இதனால் இதயம் ஆரோக்கியமடையும். எனவே, அதிகப்படியான கொலஸ்ட்ரால் தேவைப்படுபவர்கள் இவற்றை சேர்த்துக் கொள்ளலாம். குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிகள் உண்ணும் உணவில் பாதாம், பிஸ்தா சேர்த்து வந்தால், அதில் உள்ள வைட்டமின் ஈ மற்றும் வைட்டமின் பி காம்ப்ளக்ஸ் மூளையில் ரத்த ஓட்டத்தை சீராக வைப்பதுடன் நரம்பு மண்டலத்தை பாதுகாத்து, ஞாபக மறதி வராமல் தடுக்கும்.

எடைகுறைவாக வலுவிழந்து இருப்பவர்கள், எப்போதுமே சோர்ந்து காணப்படுவார்கள். இவர்கள் தினமும் காலையில் ஒரு கையளவு நட்ஸ் சாப்பிட்டு வரும்போது உடலை சுறுசுறுப்புடன் வைத்துக் கொள்ள முடியும். உடலுக்குத் தேவையான எனர்ஜியை கொடுப்பது நட்ஸின் விசேஷம். பல்வேறு ஊட்டச்சத்துகள் நிறைந்த நட்ஸை தொடர்ந்து எடுத்து வரும்போது உடலின் நோய் எதிர்ப்பு சக்தியானது அதிகரிக்கும்" என்று சொல்லும் மருத்துவர் நட்ஸை எடுத்துக் கொள்ளும் முறைகளையும் விளக்குகிறார்.

"நட்ஸில் எண்ணற்ற நன்மைகள் இருந்தாலும் அதை முறையாக சாப்பிடவேண்டும். இப்போது கடைகளில், உப்பு, காரம் போட்ட முந்திரி மற்றும் வேர்க்கடலை, உப்பு கலந்த பிஸ்தா போன்றவற்றை விற்கிறார்கள். இவற்றை ரத்த அழுத்தம் உள்ளவர்களும், உடலில் உப்புச்சத்து அதிகம் உள்ளவர்களும் சாப்பிடக்கூடாது. பாதாம், பிஸ்தாவைவிட முந்திரியில் சேச்சுரேட்டட் கொழுப்பு அதிகமாக இருப்பதால் அதை குறைவாக சாப்பிடுவது நல்லது.

ஏழைகளின் நண்பன் என்று சொல்லப்படும் வேர்க்கடலையில் அனைத்து

நன்மைகளும் இருந்தாலும் உடல்பருமன் அதிகம் உள்ளவர்கள் வேர்க்கடலையை 30 கிராம் அளவிற்கு மிகாமல் சாப்பிடுவது நல்லது. அதேபோல முந்திரியை அதிக சூட்டில் நெய்யில் வறுத்து சாப்பிடுவதும் தவறு. `அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சுதானே! எனவே தேவைக்கு அதிகமாக நட்ஸை எடுத்துக் கொண்டால் மூன்று மடங்கு கலோரிகள் அதிகமாகிவிடும்” என்று எச்சரிக்கிறார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**தர்மபுரி மாவட்டம் முழுவதும் பரவலாக பெய்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி**



தர்மபுரி மாவட்டம் முழுவதும் பரவலாக பெய்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கோடை மழை

தர்மபுரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து கோடை மழை பெய்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் இரவு பரவலாக விட்டு, விட்டு மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழைநீர் ஓடி தாழ்வான பகுதிகளில் தேங்கி நின்றது. நகர்புறப்பகுதிகளில் போதிய சாக்கடை வசதி இல்லாத பகுதிகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. மழையால் மக்கள் குடை பிடித்தப்படி சாலைகளில் நடந்து சென்றனர்.

தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரி, பென்னாகரம், பாலக்கோடு, பாப்பிரெட்டிப்பட்டி, மாரண்டஅள்ளி, காரிமங்கலம், பொம்மிடி, மொரப்பூர், தொப்பூர், கம்பைநல்லூர் ஏரியூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் மழை பெய்தது. இந்த கோடை மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். மேலும் மாவட்டத்தில் ஆங்காங்கே விவசாயிகள் உழவு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஒகேனக்கல் பகுதியில் அதிக பட்சமாக 18,80 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் வருமாறு:-

மழை அளவு விவரம்

தர்மபுரி பகுதியில் 7 மில்லி மீட்டரும், பாப்பிரெட்டிப்பட்டி பகுதியில் 9.60 மில்லிமீட்டரும், பாலக்கோடு பகுதியில் 5 மில்லி மீட்டரும், பென்னாகரம் பகுதியில் 4 மில்லி மீட்டரும், ஒகேனக்கல் பகுதியில் 18.80 மில்லி மீட்டரும், மாரண்டஅள்ளி பகுதியில் 9 மில்லி மீட்டரும் மழை பதிவாகி உள்ளது. மாவட்டம் முழுவதும் மொத்தம் 53.40 மில்லிமீட்டர் மழை பதிவாகி உள்ளது. சராசரியாக 7.63 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

**நொய்யல் சுற்று வட்டார பகுதிகளில் மரவள்ளிக்கிழங்கு விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை**



நொய்யல் சுற்று வட்டார பகுதிகளில் மரவள்ளிக்கிழங்கு விலை வீழ்ச்சி அடைந்தது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

மரவள்ளிக்கிழங்கு

கரூர் மாவட்டம், நொய்யல் வேட்டமங்கலம், ஓரம்புபாளையம், ஓலப்பாளையம், நல்லிக்கோவில், கவுண்டன் புதூர், குளத்துப்பாளையம், புன்னம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் மரவள்ளிக்கிழங்கு பயிரிட்டுள்ளனர். இப்பகுதிகளில் விளையும் மரவள்ளிக்கிழங்குகளை புதுச்சத்திரம், செல்லப்பம்பட்டி, மின்னாம்பள்ளி, கீரனூர், நாமகிரி பேட்டை, தொ.ஜேடர்பாளையம், ஆத்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் செயல்பட்டு வரும் ஜவ்வரிசி தயார் செய்யும் கிழங்கு மாவு மில்களுக்கு தரகர்கள் மூலம் டன் கணக்கில் வாங்கி அனுப்பி வைக்கின்றனர். மரவள்ளிக்கிழங்குகளை பாய்ண்ட் (டார்ச்) அடிப்படையில் வாங்குகின்றனர். கிழங்குகளில் எத்தனை

பாய்ண்ட் சத்து இருக்கின்றதோ? அதற்கு தகுந்தாற்போல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

விலை வீழ்ச்சி

அதே போல் ஜவ்வரிசி விலை உயரும் போது மரவள்ளிக்கிழங்குக்கு விலை உயர்வும், வீழ்ச்சி அடையும் போது விலை குறைத்தும் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஜவ்வரிசி விலை சேகோசர்வ் மூலம் நிர்ணயம் செய்யப்படுகிறது. கடந்த வாரம் மரவள்ளிக்கிழங்கு ஒரு டன் ரூ.5,200-க்கு விற்பனையானது. இந்த வாரம் ஒரு டன் ரூ.4,100-க்கும், ஜிப்ஸ் தயாரிப்போர் ஒரு டன் ரூ.4,400-க்கும் வாங்கிச்செல்கின்றனர். நொய்யல் சுற்று வட்டார பகுதிகளில் மரவள்ளிக்கிழங்கு விலை வீழ்ச்சியின் காரணமாக மரவள்ளிக்கிழங்கு பயிரிட்டுள்ள விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## பலத்த மழை எதிரொலி பூண்டி ஏரியின் நீர்மட்டம் உயர்வு



ஊத்துக்கோட்டை,
பலத்த மழை எதிரொலி காரணமாக பூண்டி ஏரியின் நீர்மட்டம் உயர்ந்தது.

<u>கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டம்</u>

சென்னை நகர மக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்றுவதற்காக செய்து கொண்ட கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டத்தின் படி ஆந்திர அரசு நெல்லூர் அருகே உள்ள கண்டலேறு அணையில் இருந்து திறந்துவிடும் தண்ணீர் மற்றும் மழை நீர் பூண்டி ஏரியில் சேமித்து வைக்கப்படுகிறது. இந்த ஏரியின் உயரம் 35 அடியாகும். இங்கு 3 ஆயிரத்து 231 மில்லியன் கனஅடி தண்ணீரை சேமித்து வைக்கலாம். தேவைப்படும் போது பூண்டி ஏரியில் இருந்து புழல் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரிகளுக்கு லிங்க் கால்வாய் மூலம் தண்ணீர் திறந்துவிடப்படுவது வழக்கம்.

கடந்த ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்த பலத்த மழைக்கு நீர் வரத்து அதிகமானதன் காரணமாக 10 ஆண்டுகளுக்கு பிறகு கடந்த ஜனவரி மாதம் 19–ந் தேதி ஏரியின் நீர்மட்டம் 35 அடிக்கு உயர்ந்தது.

<u>நீர்மட்டம் உயர்வு</u>

இந்த நிலையில் கோடைகாலம் தொடங்கியதால் கடந்த மார்ச் மாதம் முதல் ஏரியின் நீர் மட்டம் வெகுவாக குறைந்து வந்தது. 3 நாட்களுக்கு முன்பு ஏரியில் 25.40 அடி தண்ணீர் மட்டம் பதிவானது. வெறும் 902 மில்லியன் கனஅடி தண்ணீர் மட்டும்தான் இருப்பு இருந்தது.

இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மதியம் முதல் பெய்த பலத்த மழை காரணமாக பூண்டி ஏரிக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. நேற்று மதியம் 12 மணி நிலவரப்படி ஏரிக்கு வினாடிக்கு 1017 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. தண்ணீர் மட்டம் 26.60 அடிக்கு உயர்ந்தது.

தற்போது ஏரியில் 1,079 மில்லியன் கனஅடி தண்ண்ர் இருப்பு உள்ளது. 3 நாட்கள் மழையால் ஏரிக்கு 1.85 டி.எம்.சி. தண்ணீர் வந்து சேர்ந்துள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இதையடுத்து பலத்த மழைக்கு பூண்டி ஏரியில் நீர்மட்டம் உயர்ந்துள்ளது.

**வேலூர் மாவட்டத்தில் தொடர் மழை காவேரிப்பாக்கத்தில் அதிகபட்சமாக 58.8 மில்லி மீட்டர் பதிவு**

வேலூர் மாவட்டத்தில் காவேரிப்பாக்கத்தில் அதிகபட்சமாக 58.8 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

<u>அக்னி நட்சத்திரம்</u>

வேலூர் மாவட்டத்தில் அக்னி நட்சத்திரம் தொடங்கும் முன்பு இருந்தே வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. அதிகபட்சமாக 110.6 டிகிரி வரை வெயில் கொளுத்தியது. இதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர்.
அக்னி நட்சத்திரம் கடந்த 4–ந் தேதி தொடங்கியது. வெயில் பாதிப்பு அதிகமாக இருக்கும் என்று கருதி பொதுமக்கள் பகல் நேரங்களில் வெளியே வரவேண்டாம் என்று மாவட்ட நிர்வாகம் அறிவித்திருந்தது.
அக்னி நட்சத்திரம் வருவதற்கு முன்பே வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததால், அக்னி நட்சத்திரம் தொடங்கிய பின்பு வெயிலின் தாக்கத்தை எப்படி சமாளிப்பது என்ற கவலையில் பொதுமக்கள் இருந்தனர். ஆனால், பொதுமக்கள் எதிர்பார்த்த படி வெயிலின் தாக்கம் அதிகமாக இல்லை. இதனால் பொதுமக்கள் சற்று நிம்மதி அடைந்தனர்.

பரவலாக மழை

கடந்த 16–ந் தேதி முதல் வேலூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதில் நேற்றுமுன்தினம் தொடர்ந்த மழை நேற்று அதிகாலை வரை தொடர்ந்து பெய்து கொண்டு இருந்தது.
இந்த நிலையில் நேற்று காலையில் இருந்து மதியம் 2 மணி வரை வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. திடீரென மதியம் 2.30 மணியளவில் வேலூரில் பரவலாக மழை பெய்தது. இந்த மழை தொடர்ந்து விட்டு, விட்டு பெய்தது. இரவும் பலத்த மழை பெய்தது. இதனால் சாலையில் உள்ள பள்ளங்களில் தண்ணீர் தேங்கியது.

மழை அளவு

வேலூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் நேற்று காலை 8 மணி வரை பெய்த மழையின் அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–
காவேரிப்பாக்கம்– 58.8, ஆற்காடு– 43.9, சோளிங்கர்– 42, வேலூர்– 23.2, வாலாஜா– 22.2, அரக்கோணம்– 20, மேலாலத்தூர்– 14.8, குடியாத்தம்– 12.4, ஆலங்காயம்– 10.2, திருப்பத்தூர்– 7, ஆம்பூர்– 6.8, வாணியம்பாடி– 2. மொத்தம்– 263.3 மில்லி மீட்டராகும்.

**மூங்கில்துறைப்பட்டு பகுதியில் இடி– மின்னலுடன் பலத்த மழை**



மூங்கில்துறைப்பட்டு,

மூங்கில்துறைப்பட்டு பகுதியில் இடி–மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

4–வது நாளாக மழை

தமிழகத்தில் கடந்த சில மாதங்களாக கடும் வெயில் அடித்து வந்தது. இதனால் பொது மக்கள் பெரும் அவதி அடைந்து வந்தனர். இந்த நிலையில் வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகத்தில் 4–வது நாளாக நேற்று பரவலாக மழை பெய்தது. அதன்படி மூங்கில்துறைப்பட்டு மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் இடி–மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

மழையானது அவ்வபோது விட்டு விட்டு பெய்தது. இதனால் மூங்கில்துறைப்பட்டு பகுதிகளில் உள்ள முக்கிய சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. மேலும் தாழ்வான இடங்களில் மழை நீர் குளம் போல் தேங்கியது. இது தவிர மூங்கில்துறைப்பட்டு, இளையாங்கன்னி, சவேரியார்பாளையம் உள்பட பல்வேறு கிராமங்களில் விவசாயிகள்

சாகுபடி செய்திருந்த நெல், மக்காசோளம், மணிலா உள்ளிட்ட பயிர்களை சுற்றி மழை நீர் சூழ்ந்தது.

விவசாயிகள் கவலை

இதனால் விவசாய பயிர்களை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். மூங்கில்துறைப்பட்டு பகுதியில் தொடர்ந்து 4 நாட்களாக மழை பெய்து வருவதால், பொது மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.